அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 22/89

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.
1989, மார்ச்சு 23 ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**பிரசவ லீவு - தாபனவிதிக் கோவை அத்தியாயம் XII**

18 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலீடாகப் பின்வருவனவற்றைச் சேர்த்துக் கொள்க :-

18. பிரசவ லீவு

18:1 இப்பிரிவின் கீழ் திருமணத்தின் பேரில் இளைப்பாறுமாறு வேண்டப்படும் பெண் உத்தியோகத்தரொருவர் சட்ட பூர்வமற்ற குழந்தையொன்றின் தொடர்பில் இப்பிரிவின் கீழ் பிரசவ லீவைப் பெறுவதற்குத் தகுதியுடையவரல்லர்.

18:2 9 மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குச் சேவையாற்றிய பெண் உத்தியோகத்தரொருவர் 1ஆம், 2 ஆம் உயிருள்ள குழந்தைகளின் பிரசவங்களுக்காக 12 வாரங்களுக்கு முழுச் சம்பள லீவைப் பெறுவதற்கு உரித்துடையவராவர் என்பதுடன் அவர் குழந்தை பிறந்ததிலிருந்து 4 வாரம் முடிவடைவதற்கு முன்னர் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

18:3 9 மாதங்களைக் கொண்டதைக் குறைந்தகாலத்திற்கு சேவை செய்யாத பெண் உத்தியோகத்தரொருவருக்கு 1ஆம், 2 ஆம் உயிருள்ள குழந்தைகளின் பிரசவங்களுக்கு 12 வாரகாலத்திற்கு லீவு வழங்கப்படும். இந்த 9 மாதங்களில் அவர் எந்த அளவு காலத்திற்குச் சேவையாற்றினாரோ அக்கால அளவுக்கு ஏற்ப அவருக்கு முழுச்சம்பள லீவு வழங்கப்படும். மீதமாகவுள்ள லீவு சம்பளமற்ற லீவாகக் கொள்ளப்படும்.

18:4 9 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு சேவையாற்றிய பெண் உத்தியோகத்தரொருவர் 1ஆம், 2ஆம் உயிருள்ள குழந்தைகளின் பிரசவங்களுக்கு மேற்பட்ட எந்தப்பிரசவங்களுக்கும் 6 வாரகாலம் முழுச்சம்பள லீவைப் பெறுவதற்கு உரித்துடையவராவர் என்பதுடன் குழந்தை பிறந்ததிலிருந்து 4 வாரங்கள் முடிவடைவதற்கு முன்னர் அவர் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

18.5 9 மாதங்களைக் கொண்ட ஆகக்குறைந்த காலப்பகுதிக்குச் சேவை செய்யாத பெண் உத்தியோகத்தரொருவருக்கு 1ஆம், 2 ஆம் உயிருள்ள குழந்தைகளின் பிரவசங்களுக்கு மேற்பட்ட எந்தப் பிரசவத்திற்கும் 6 வாரகால லீவு வழங்கப்படலாம். 9 மாதங்களில் அவர் எந்த அளவு காலத்திற்கு சேவையாற்றியுள்ளாரோ அக்கால அளவுக்கு ஏற்ப அவருக்கு முழுச் சம்பள லீவு வழங்கப்படலாம். மீதமாகவுள்ள லீவு சம்பள மற்ற லீவாக கொள்ளப்படும்.

18.6 பிரசவலீவைக் கணக்கிடும்போது அந்த லீவுக்கு உட்படும் அரசாங்க விடுமுறைத்தினங்களும் ~~சனிக்கிழமைகளும்~~ ~~ஞாயிற்றுக்கிழமைகளும்~~ அதில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

18.7 ஆசிரியர், தற்காலிக உத்தியோகத்தர், நாட்சம்பள உத்தியோகத்தர், அமைய உத்தியோகத்தர் அல்லது சிறு பணியாளர் தவிர்ந்த பிற உத்தியோகத்தரொருவரின் விடயத்தில் 12 வாரங்களைக்/6 வாரங்களைக் கொண்ட பிரசவ லீவு கிடைக்கக்கூடியதாகவுள்ள எந்தத் திரண்ட லீவிற்கும் (அதாவது முந்திய ஆண்டின் ஓய்வு லீவுக்கும்) எதிராகக் கழிக்கப்படுமெய்யுடன் எஞ்சியிருக்கும் எந்த மீதியும் 10 ஆம் பிரிவின் கீழுள்ள காலங்கடந்த ஓய்வு லீவுக்கு எதிராகக் கழிக்கப்படும். அது உத்தியோகத்தர் கருத்தறித்த ஆண்டின் ஓய்வு லீவிலிருந்து கழிக்கப்படலாகாது. திரண்ட அல்லது காலங்கடந்த லீவினுல் அல்லது இரண்டு லீவு களினாலும் அளாவப்படமுடியாத 12 வார/6 வாரகால முழுச் சம்பள லீவின் பகுதி அவ்வாண்டிற்காக உத்தியோகத்தருக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள சாதாரண லீவுடன் கூடுதலாக விசேட முழுச் சம்பள லீவாகக் கருதப்படல் வேண்டும்.

18.8 ஆசிரியர், தற்காலிக உத்தியோகத்தர், நாட்சம்பள உத்தியோகத்தர், அமைய உத்தியோகத்தர் அல்லது சிறு பணியாளர் ஒருவரின் விடயத்தில் 6 வார முழுச் சம்பளப் பிரசவலீவு அவ்வாண்டின் சாதாரணலீவுடன் கூடுதலாக விசேட முழுச் சம்பள லீவாகக் கருதப்படல் வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் 1989.03.01 ஆந் தேதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும்.

ஒப்பம் (சிறில் கமகே)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.